166

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல:6/2001

எனது இல:பி/1/3
அரசாங்க நிருவாக,உள்நாட்டலுவல்கள்,
நிருவாக மறுசீரமைப்பு அமைச்சு.,
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07.

2001.மார்ச்சு மாதம் 14ஆந் திகதி.

சகல பிரதேச செயலாளர்களுக்கு,

<u>ஒய்வூதியம் மற்றும் விதவை/ தபுதாரர் ஒய்வூதியக் கொடுப்பனவை துரிதப்படுத்தல்.</u>

ஒய்வூதிய/விதவை அனாதை ஒய்வூதிய/ தபுதாரர் அனாதை ஒய்வூதியக் கொடுப்பனவை துரிதப்படுத்தல்.

2001.06.01 ஆந் திகதியிலிருந்து மாதாந்த ஒய்வூதியங்கள் மற்றும் விதவை/தபுதாரர் அனாதை ஒய்வூதிய கடமைகள் யாவும் வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர ஒய்வு பெறுநர் வசிக்கும் பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நீங்கள் தற்போதைக்கு உங்களின் பிரிவுக்கு வெளிப்பகுதியில் வசிக்கும் ஒய்வுபெறுநர் ஒருவருக்கு ஒய்வூதியமோ அல்லது விதவை அனாதை ஒய்வூதியமோ வழங்குவதாக இருந்தால் அக் கொடுப்பனவுடன் சம்பந்தப்பட்ட எல்லா விபரங்களுடன் தொடர்பு -டைய கடிதக் கோவையை அவ்ஒய்வூதியம் பெறுநர் வசிக்கும் பிரிவின் பிரதேச செயலாளரிடம் அனுப்ப வேண்டியதுடன் அதுபற்றி ஒய்வூதியம் பெறுநருக்கு அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு அனுப்பும் கடமைகளை 2001.மே மாதம் 31ஆந் திகதி முடிவுறுத்தும் பொறுப்பு தங்களையே சாரும்.ஒய்வூதியம் பெறுநரின் விருப்பத்திற்கேட்ப அவர் ஒய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கின்ற எந்தவொரு வங்கி கிளையிலிருந்தும் ஒய்வூதியத்தை பெறுவதற்கு இது எவ்விதத்திலும் தடையாக அமைதலாகாது.இனிவரும் காலங்களில் ஒய்வு பெறுகின்ற அலுவலர்களுக்கும் இவ் ஏற்பாடு ஏற்புடையதாகும்.

அரச அலுவலரொருவர் ஒய்வு பெறும்போது மாதாந்த ஒய்வூதியக் கொடுப்பனவுக் -காக 16/95(VII)ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின்படி அனுப்பப் படுகின்ற எழுத்தாவணங்களை அவரின் வதிவுப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

2...(02)

766R

## 02. விதவை/தபுதாரர் அனாதை ஓய்வூதியக் கொடுப்பனவை துரிதப்படுத்துதல்:

ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் மரணித்துவிட்டதன் பின் வாழ்க்கைத் துணைவர் விதவை/ தபுதாரர் ஓய்வூதியத்தை மிக விரைவில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அவரின் ஓய்வூதியத்தை செலுத்துகின்ற பிரதேச செயலாளர் அவ் ஓய்வூதியம் பெறுநரின் விதவை அனாதை கடிதக் கோவையை 2001.08.01 ஆந் திகதிக்கு முன்னராக தன்னிடம் வரவழைத்து பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்குரிய ஒழுங்குகளை செய்ய வேண்டும். தற்போதைக்கு வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் பிரதேச செயலாளர்கள் மட்டும் இவ்வேற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இப்பணியை பூர்த்தி செய்வதற்காக ஓய்வூதிய கடிதக் கோவையை ஆதாரமாகக் கொண்டு அல்லது ஓய்வுபெற்றவரிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொண்டு பின்வரும் விபரங்கள் அடங்கிய பட்டியலொன்றை ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மாதிரிப்படிவம்:

| ஓய்வுபெற்றவரின் பெயர் | முகவரி | ஓய்வூதிய இலக்கம். | விதவை அனாதை அங்கத்துவ இலக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## 03. விதவை/தபுதாரர் அனாதை ஓய்வூதிய பற்றுச்சீட்டுக்களை வழங்குதல்:

விதவை ஓய்வூதியம்/ தபுதாரர் ஓய்வூதியம்/ அனாதைகள் ஓய்வூதியம் செலுத்துவதற்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற பற்றுச் சீட்டை 2001ஏப்ரல் மாதம் தொடக்கம் உபயோகிக்காமல் நிறுத்தி விதவை/ தபுதாரர் பெற்றுக் கொள்ளும் விதவை ஓய்வூதிய பட்டியலை தொடர்புடைய வங்கிக்கு/ அஞ்சல் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மாதாந்தம் விதவை ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்வதற்காக வங்கிக்கு/ அஞ்சல் அலுவலகத்திற்கு கையொப்பமிட்டு ஒப்படைப்பதற்காக (திறைசேரி மற்றும் கணக்கு பரிசோதனை 129 மற்றும் 130) ஒரு வருடத்திற்குத் தேவையான படிவங்களை அதாவது 12ஐ பிரதேச செயலாளர் ஒரே முறையில் தொடர்புடைய வாழ்க்கை துணைவருக்கு வழங்க வேண்டும்.

/....(03)

166 B

04. மாதாந்த ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளாமை:

இது தொடர்பில் இதற்கு முன் ஓய்வூதிய பணிப்பாளரால் 5/2000 ஆம் இலக்க 2000-08-07 ஆந் திகதிய சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள மதியுரைகளின் பால் கவனம் கோரப்படுகிறது.

வங்கிகளின் மூலம் ஓய்வூதியங்களை கொடுப்பனவு செய்வதற்காக அனுப்பப் படுகின்ற பணத் தொகைகளை ஓய்வுபெற்றவர்கள் பெற்றுக் கொள்ளாத சந்தர்ப்பங்களில் அத் தொகைகளை மீண்டும் பிரதேச செயலகங்களுக்கு திருப்பி அனுப்புவதற்காக நீண்ட காலம் செய்வதென தெரியவந்துள்ளது. இக்காரணத்தால் சில அலுவலகங்களில் கணக்குப் பதிவேடுகளை சரியாக நடாத்திச் செல்ல இயலாதிருப்பதுடன் பின்பு வருகின்ற ஓய்வுபெற்றவர்களுக்கு அவ்ஓய்வூதியத்தை செலுத்தும் போது கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஆகையால் வங்கிகளின் மூலம் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்பவர்கள் தமது ஓய்வூதியங்களை பெற்றுக் கொள்ளாத சந்தர்ப்பங்களில் ஓய்வூதியம் செலுத்தப்படும் திகதியிலிருந்து ஒரு மாதம் செல்ல முன்னராகவும், வெளிநாடு -களில் இருக்கின்ற ஓய்வுபெற்றவர்கள்தமது ஓய்வூதியங்களை பெற்றுக் கொள்வதற்குரிய ஒழுங்குகளை செய்யாதிருப்பின் ஓய்வூதியம் செலுத்தப்படும் திகதியிலிருந்து இரண்டு மாதங்கள் செல்ல முன்னராகவும், பெற்றுக் கொள்ளப் படாத அவ் ஓய்வூதியங்களை தமது அலுவலகங்களுக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு ஓய்வூதியம் செலுத்தப்படுகின்ற சகல வங்கி முகாமையாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கவும்.

ஓய்வூதியங்களை குறித்த திகதியில் பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு 03 மாதங்களுக்குள் பெற்றுக் கொள்ளாத ஓய்வூதிய நிலுவைத் தொகைகள் தொடர்பில் இவ்வமைச்சுக்கு பொறுப்பு இராது என்பதையும் சகல ஓய்வு பெற்றவர்களது கவனத்திற்க் கொண்டுவருவதற்கு பிரதேச செயலாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத் தொகைகளை திருப்பி அழைப்பித்துக் கொள்வது பிரதேச செயலாளர்களின் பொறுப்பாகும்.

(எம்.எல்.ஜுனைட்)
செயலாளர்.
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், நிருவாக மறுசீரமைப்பு அமைச்சு.

பிரதிகள்:

1. சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு,
2. சகல மாவட்டச் செயலாளர்களுக்கு,
3. இலங்கையில் சகல தூதுவர்களுக்கும், உயர் ஸ்தானிகளுக்கும்,

தவே/